RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1918

OPEN ACCESS

# புறநானூற்றில் மனித அறக்கோட்பாடுகள்

பொ. அகத்திய பாலா [அ, *], க. சரவணன் [அ]

[அ] தமிழாய்வுத்துறை, அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), கரூர்-639007, தமிழ்நாடு, இந்தியா

# Moral Principles for Human in Purananuru

B. Agathiyabala [a, *], K. Saravanan [a]

[a] Department of Tamil, Government Arts College (Autonomous), (Affiliated to Bharathidasan University), Karur-639007, Tamil Nadu, India

* Corresponding Author: agathiyabalaab@gmail.com

Received: 19-07-2022
Revised: 22-09-2022
Accepted: 28-09-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

If the human beings want to live well then it is necessary for him/her to have moral sense and moral principles in his mind. The songs composed in Purananuru considered the theory and feeling as the raw material for these, even though they inherited love, domesticity, and heroism. Among the many books of the Sangam literatures, it is an acclaimed book read by many people. The Tamil and Dravidian movements that emerged in the twentieth century were able to build their identities through classical literature. Tamil people thought that if they want to lead a better life then they must have strong goals and good moral behaviour in their life. Thus, they thought and followed virtue as the basic characteristic of human life. They understand that the self-respect of an individual lies in his moral behaviour. The reason why the Tamil people are admired by the whole world during the war is because they had various virtues in their life. This article explains about the moral principles that have been said in Purananuru.

**Keywords:** Purananuru, Moral Principles, Human, Songs, Feeling

## முன்னுரை

தமிழ் மொழியும், தமிழரும் இன்றைக்கு உலக அளவில் போற்றப்படுவதற்கும் மதிக்கப்பெறுவதற்கும் முக்கியக் காரணம் சங்க இலக்கியத்தில் ஒன்றாக அமைந்த புறநானூற்றுப் பாடல்கள் எனலாம். இப்புறநானூற்றின் மேன்மையையும், அறக்கோட்பாட்டையும் உலக மக்கள் அறிந்திருந்ததாலும் உணர்ந்ததனாலும், தற்காலசூழலில் அறம் பற்றியும் அறக்கோட்பாட்டைப் பற்றியும் பேச வேண்டியது அவசியமாகிறது. காரணம் அவர்களின் அற உணர்வுகள் குறைந்து போனதும், அதனை வெளிப்படுத்தாமல் இருப்பதுமே ஆகும்.

எந்த நாட்டில் அறம் மேலோங்குகிறதோ, அங்கு நிச்சயமாக மானுடத்திற்கு எதிரான வன்முறைகள் குறையும். உலக நாடுகளுக்கு இடையே போர் மூளும் சூழலில் கூட மக்கள் வறுமையின்றியும், மனமகிழ்வுடனும் வாழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.

மேலும், நீதியும், ஒழுக்கமும் ஒரு தேசத்தின் தூண்களாகுமேயானால், அந்த தேசத்தில் மக்கள் வாழ்வு காலம் கடந்தும் நிலையாக நிற்கும் என்பதற்கான சான்றுகளே சங்க இலக்கியங்களாகும். அதிலும், புறநானூற்றில் பொதுவியல் துறையின் வாயிலாக, அறம் மன்னனுக்கும் மக்களுக்கும்

எடுத்துரைக்கப்பட்டது. ஆதலால் தான் ஆயிரம் ஆண்டுகளுக்கு பிறகும் புறநானூற்றுப் பாடலை ஐ.நா. சபை பயன்படுத்துகிறது.

## அறம் கோட்பாடு

அறம் என்னும் சொல்லிற்கு தருமம் என்று பொருள் தருகிறது (Pingala Munivar, 1917). அறம் என்ற சொல்லின் பொருள்யாதென்றால், "அறு" என்னும் வினைச் சொல்லை வேர் சொல்லாக கொண்டது. அறம் என்றால் அறுத்துச் செல், வழியை உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து என்ற பொருளை எல்லாம் அறிஞர்கள் தருகின்றனர். கோட்பாடு என்பதற்கு கரு, இயக்கு வழி என்ற பொருளை நல்குகிறது தமிழ் இணைய அகராதி. இதன் மூலம் தமிழ் மொழியில் அறமும் - கோட்பாடும் எத்தகைய இடத்தை தமிழர் வாழ்வில் பெற்றுள்ளது என்பது புலனாகிறது.

## தனிமனித அறம்

தனிமனித அறம் என்பது அம்மனிதனின் செயல் மற்றும் நடத்தையின் மேன்மையை பொருத்தது. மனித வாழ்வில் ஒருவன் சிறந்தவனாகவும், ஒருவன் குற்றமுடையவனாகவும் கருதப்படுவதற்கு அடிப்படை காரணமாக அமைவது இந்த தனிமனித அறம். நடத்தை மற்றும் செயல் இவைகளின் வெளிப்பாடே ஈகை, இரக்கம், ஒழுக்கம், நன்றி அறிதல், நீதி தவறாமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

தமிழரின் சங்க வாழ்க்கை போர் நிறைந்ததாகவும், பிரிவினைகள் நிறைந்ததாகவும் இருந்தாகும் கூட அவர்களின் நடத்தையில் அறக்கோட்பாடு மேலோங்கி இருந்தது எனலாம். புலவன் ஒருவன் தான் கல்வி அறிவு பெற்று இருந்தமையால் எந்த தேசம் சென்றாலும் உணவு உண்டு என பாடும் இடத்தில், மன்னர்கள் இடையே போர்குணம் இருந்தாலும் மக்களை எந்த தேசத்தவராக இருந்தாலும் ஆதரவு கொடுத்துள்ளனர் என்பதற்கான சான்றே

"எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே"

என்னும் இப்பாடல், மன்னன் தன்னை நாடிவருபவர்களை மட்டும் அன்றி அவன் உறவுகளையும் ஏற்றுக் கொண்டுள்ளான் என்பதை வறுமையோடு வந்த புலவன் பாடி பரிசு பெற்ற பாடல் (Balasubramanian, 2004),

"உண்பது நாழி உடுப்பவை இரண்டே

பிறவும் எல்லாம் ஓர் ஒக்கும்மே

செல்வத்துப் பயனே ஈதல்"

இதில், சங்க மக்களின் கொடைத்திறம், இவர்கள் பிறருக்கு கொடுத்த வாழ்வதையே தனது வாழ்வின் பயனெக் கருதினர் என்பதம் தெளிவாகிறது (Balasubramanian, 2004). மேலும், ஒருவர் செய்த நன்றியை வாழ்நாள் முழுவதும் நினைக்கும் பழக்கமும் நிறைந்தவர்கள் இவர்கள் என்பதை,

"இமையத்து ஈண்டி இன்குரல் பயிற்றிக்

கொண்டல் மாமழை பொழிந்த

நுண்பல் துளியினும் வாழிய பலவே!"

புறநானூற்றின் இப்பாடல் காட்சி நமக்கு புலனாக்குகிறது (Balasubramanian, 2004).

அது மட்டும் அன்றி தனது அற உணர்வை எத்தகு நிலையிலும் இழக்கவில்லை என்பதை,

"தாதுண் பறவை பேதுறுல் அஞ்சி

மணிநா ஆர்த்த மான்விணைத் தேரன்

உவக்காண் தோன்றும் குறும் பொறை நாடன்”

இப்பாடல் காட்சி புலப்படுத்துகிறது (Jayabal, 2004). இதில், தலைவன் போர் முடிந்து இல்லம் திரும்பும் நல்லிரவு வேளையிலும் கூட இரண்டு மான்கள் ஒன்றாக புணரும் வேளையில் தன்தேர் இடையூறு செய்தல் கூடாது என்று தேரில் கட்டப்பட்ட மணியினை அழுத்திப் பிடித்துக்கொண்டான் இதில் அவனுடைய அனைத்து உயிர்களும் சமம், உணர்வுகளும் சமம் என்ற எண்ணம் வெளிப்படுகிறது.

மேலும், முன்னோர்களின் மனித நேயத்தை,

“தீதும் நன்றும் பிறர்தர வாரா”

“பெரியோரை வியத்தலும் இலமே

சிறியொரை இகழ்தல் அதனினும் இலமே”

இவ்வாறாக காட்சிப்படுத்துகிறது (Balasubramanian, 2004). இதில், நன்மையும், தீமையும், நமது செயலை பொருத்தது. இதற்கு யாரும் காரணம் அல்ல என்றும் பெரியவர்கள் என்பதற்காக அவர்களை பாராட்டுதலும் தவறு, சிறியவர்கள் என்பதற்காக அவர்களை இழிந்து பேசுதல் அதைவிட தவறு என்னும் இடத்தில் மானுடத்தின் உயரிய சிந்தனையை, அறத்தை கொண்டு வாழ்ந்தவன் தமிழன் என நிரூபனமாகிறது.

இதனை,

“பகுத்துண்டு பல் உயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாந் தலை”

வள்ளுவப் பெருந்தகை இவ்வாறு இயம்புகிறார் (Sivasubramaniyam, 2014).

இதுமட்டும் அன்றி,

“நல்லது செய்தல் அற்றர் ஆயினும்

அல்லது செய்தல் ஓம்புமின்”

என்று சங்கத்தான் கூறுகையில் அவனது நல் எண்ணம் அறமாக மிளிர்கிறது (Balasubramanian, 2004).

## வாழ்வியல் அறம்

இதுவரையில் தனிமனித அறத்தை நடத்தை மற்றும் செயல் என இரண்டாக பிரித்து ஆராய்ந்தோம் இன் வாழ்வியல் அறத்தைப் பற்றிக் காண்போம். எப்படி வேண்டும் என்றாலும் வாழலாம் என்பது இல்லாமல் இப்படியான அறக்கோட்பாட்டையே தனது மரபின் கருவாக கொள்ள வேண்டும் என்று வாழ்ந்தவர் நமது மரபினர்.

மனித உயிர்களின் தேடல் இயக்கம் எல்லாம் உயிர் வாழத் தேவையான உணவு மற்றும் நீரைச் சார்ந்தது என்பதனாலே பண்டைய மக்களின் வீடுகளில் திண்ணை போன்ற அமைப்பு இருந்தது. இரவில் வருபவர் தங்கி உணவு மற்றும் நீர் பெற்றுக் கொண்டும் ஓய்வு எடுத்துச் செல்வர் இதனை விருந்தோம்பல் என்று பெயரிட்டு அழைக்கின்றனர்.

திருக்குறளோ விருந்தோம்பலுக்கு,

“மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து

நோக்கக் குழையும் விருந்து”

இவ்வாறான இலக்கணமே தருகிறது (Sivasubramaniyam, 2014). ஆண், பெண் இருவரும் வீட்டிற்கு வருபவரை தெய்வம் என உபசரிக்கும் வழக்கத்தைக் கொண்டனர். ஆதலால் தான் வாழ்க்கைக்கு இலக்கணம் கூறிய காப்பியர்,

"விருந்துபுறத் தருதலும்"

தலைவிக்கான இலக்கணமாக குறிப்பிடுகிறார் (Thirugnnasambamdam, 2018).

விருந்தோம்பலின் சிறப்பை புறம்,

"உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" (Balasubramanian, 2004)

இவ்வாறு காட்சிப்படுத்துவது மட்டும் அன்றி, இல்வாழ்வில் கணவன் மனைவிக்கான அகவாழ்வின் அறத்தை,

"காக்கம் வம்மோ காதலன் தோழி

வேந்துறு விழுமம் தாங்கிய

பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே"

புறநானூறு இவ்வாறு விவரிக்கிறது (Balasubramanian, 2004). இதில் தலைவன் போரில் இறந்து கிடக்கையில் தலைவி பேய்கள் அவனை தொடாத வண்ணம் காக்கிறாள்.

இதே போல் தலைமகனுக்கான இல்வாழ்க்கை அறமாக தொல்காப்பியம்.

"காதலி இழந்த தபுதார நிலையும்"

இவ்வாறாக காட்சிப்படுத்துகிறது (Thirugnnasambamdam, 2018).

இதில் தலைவி இறந்து விட தலைவன் வருந்தி அழும் நிகழ்வை காட்டுகிறது. மேலும் வாழ்வின் உண்மை நிலையை எத்தனை தான் வாழ்ந்தாலும், புகழ் பெற்றாலும், இறுதியில் இடுகாடும், சுடுகாடுமே நிரந்தரம் என்னும் நிலையாமையை,

"எல்லார் புறனும் தான் கண்டு உலகத்து

மன்பதைக்கும் எல்லாம் தானாய்த்

தன் புறம் காண்போர்க் காண்பறி யாரே"

புறநானூற்றுப் பாடல் இவ்வாறு காட்சிப் படுத்துகிறது (Balasubramanian, 2004).

இதில் எல்லோரையும் தன்னுள் அடக்கிக்கொள்ளும் மாயத்தன்மை உள்ள சுடுகாட்டை வாழ்த்திப் பாடுகின்றனர்.

## நட்பறம்

புறநானூறு நட்பின் உயர்வை ஒரு அறமாக போற்றுகிறது. இந்த அறத்திற்கு ஆண், பெண் பேதம் இல்லை. புகழ வேண்டிய இடத்தில் புகழ்ந்தும், இகழ வேண்டிய இடத்தில் இகழ்ந்தும் எல்லா நிலைகளிலும் உறுதுணையாகவும் நிற்பதும் நட்பிற்கான அறமாக கருதலாம்.

## ஔவை - அதியமான் நட்பறம்

ஔவை மற்றும் அதியமானின் நட்பு எத்தகையது எனில், அதியமானின் வரலாற்றையோ, ஔவையின் வரலாற்றையோ ஒருவர் பேசும் இடத்தில் இவர்கள் இருவரையும் இணைத்தே பேச வேண்டும்.

இவர்களின் நட்பை,

“வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்

களம்படக் கடந்தகழல் தொடிதடக்கை

ஆர்கலி நறவின் அதியர் கோமான்”

புறநானூறு இவ்வாறு புலனாக்குகிறது (Balasubramanian, 2004). இதில் இவர்களின் நட்பிற்கான அறத்தின் வெளிப்பாடகவே நெல்லிகனி கொடுத்ததை பார்க்க வேண்டும். காரணம் நட்பு மட்டுமே தனக்கென இல்லாது தோழமையின் நலனை காணும்.

அதே போல், தான் ஔவையும் போரை நிறுத்த செல்லும் இடத்தில் கூட தனது தோழனின் பலத்தை,

“களம் புகல் ஓம்புமின் தெவ்விபோர் எதிர்ந்து

எம்முளும் உளன் ஒரு பொருநன் வைகல்

எண்தேர் செய்யும் தச்சன்

திங்கள் வலிந்த கால் அன்னோனே”

இவ்வாறாக எடுத்துரைக்கிறார் (Balasubramanian, 2004). இதில் தனது தோழனின் வலிமையின் மீது கொண்ட அளவுகடந்த நம்பிக்கை இவர்களின் நட்பிற்கான அறமாக வெளிப்படுகிறது.

## கபிலர் - பாரியின் நட்பு

கபிலர் பாண்டிய நாட்டில் பிறந்து பாண்டிய மன்னனின் ஏவலின் பெயரில் பறம்பு மலை சென்று சிறிது காலம் தங்கியதில் இருவருக்கும் நட்பு மலர, இந்த நட்பின் அறமானது பாரியின் இறப்பிற்கு பின்பும் வலுவாக இருந்தது.

இவர்களின் நட்பை,

“பெருந்தகு சிறப்பின் நட்பிற்கு ஒவ்வாறு

ஒருங்கு வரல் விடா அது ஒழிக எனக்கூறி

உடன் உறைவு ஆக்குக உயர்ந்த பாலே”

புறநானூறு இவ்வாறு வடித்துள்ளது (Balasubramanian, 2004).

## கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் நட்பு

கோப்பெருஞ் சோழன் மற்றும் பிசிராந்தையார் இருவரும் ஒருவரை ஒருவர் கண்டதே இல்லை. ஆனால், இருவரின் குணநலன்களும் இருவரையும் நட்பென்னும் உறவில் பிணைத்தது. இவர்கள் கொண்ட நட்போ இறப்பிலும் இணைபிரியா அறத்தைக் கொண்டது. இதனை,

“உயர்நிலை மாடத்து குறும்பறை அசைஇ

பெருங்கோக் கிள்ளிக் கேட்க இரும் பிசிர்

ஆந்தை அடியுரை எனினே மாண்ட நின்

இன்புறு பேடை அணிய தன்

அன்புறு நன்கலம் நல்குவன் நினக்கே”

புறம் இவ்வாறு சிறப்பிக்கிறது (Balasubramanian, 2004). நட்பிற்கு அறக்கோட்பாட்டை தோற்றுவித்தவர்கள் இவர்கள் என்பதில் ஐயமில்லை.

## அஞ்சா அறம்

சங்க இலக்கியத்தை “வீரநிலை கால இலக்கியம்” என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுவதற்கு இதனும் புதைந்து கிடக்கும் வீரத்தின் தன்மையே காரணம். அஞ்சுதல் இல்லா மரபினர் தமிழர் என்பதை பறைசாற்றுவதற்கான சான்றுகளை புறம் இவ்வாறு,

“புலி சேர்ந்து போகியகல் அளைபோல

ஈன்ற வயிறோ இதுவே

தோன்றுவன் மாதோ போர்க் களத்தானே”

காட்சிப்படுத்துகிறது (Balasubramanian, 2004).

இதில், வீரம் என்பதற்கு வேறு விதமாக அஞ்சாத தன்மையை அறம் என பதிவிடுகிறது. இதில் பெண்ணின் தியாகம் மாபெரும் அறமாக போற்றப்படுகிறது எனலாம்.

இதனை,

“பகையகத்துச் சாவார் எளியர்”

“பகையகத்து பேடிகை ஒளிவாள்”

குறள் இவ்வாறெல்லாம் காட்சிப்படுத்துகிறது (Sivasubramaniyam, 2014). பகைவர் என்று தெரிந்தும் போரில் சென்று இறப்பது வீரம் எனக் கூறுகிறார் வள்ளுவர் இதனையே புறம்பறம்,

“முத்தீ விளக்கின் துஞ்சும்

பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றாம்”

இவ்வாறு காட்சிப்படுத்துகிறது (Balasubramanian, 2004). இங்கு வீரத்தின் அறமாக நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பது வீரத்தின் அறமாக கருதப்படுகிறது. மேலும் புறமுதுகு காட்டாமல் நேரே போட்டியில் வீரத்தின் மற்றொரு அறமாக சுட்டப்படுகிறது.

இதனை,

“முரசு கெழு தாயத்து அரசோ தஞ்சம்

இன் உயிர் ஆயினும் கொடுக்குவென் இந்நிலத்து

ஆற்றல் உடையோர் ஆற்றல் போற்றாது”

இவ்வாறு காட்சிப்படுத்துகிறது (Balasubramanian, 2004).

இதில், நாட்டைக் காப்பது எனது கடமை பகைவர்களை புறமுதுகிட்டு ஓடச் செய்வேன் என்பது இவன் கொண்ட வீரத்தின் அறமாகும். முதுகில் புண்பட்டால் இறந்து படுவது மற்றொரு வீரத்தின் அறமாகும்.

இதனை,

“மிகப் புகழ் உலகம் எய்தி

புறப் புண் நாணி வடக்கிருந்தோனே?”

புறப்பாட்டு இவ்வாறு மெய்பிக்கிறது (Balasubramanian, 2004).

அஞ்சாவீரம் எனப்படுவது வீரத்தின் அனைத்து அறங்களையும் வழுவாமல் வாழ்வில் பின் பற்றுவது என பல்வேறு அறத்தை புறம் தன்னுள் பதிவிட்டுள்ளது நமது மரபின் பெருமையாகும்.

## முடிவுரை

உலக இனங்கள் பல்வேறாக இருக்கலாம், மரபு வேறாக இருக்கலாம். ஆனால், மனித இனத்தில் மாறாமல் ஒன்றாக இருக்க வேண்டிய ஒற்றை கரு அறக்கோட்பாடுகள் என்றால் மிகையில்லை. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகம் முழுமைக்கான அறக்கோட்பாட்டை வடித்தவர்கள் தமிழர்கள் என்பதற்கான சான்றுகளே, புறநானூற்றில் காணப்படும் அறக்கோட்பாடுகளை பல்வேறு பொருண்மைகளில் இது வரையில் ஆராய்ந்தோம்.

## References

Balasubramanian, K.V. (2004) Purananooru Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.

Jayabal, R. (2004) Agananooru Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.

Pingala Munivar, (1917) Pingala Nikandu, Madras University, Chennai, India.

Sivasubramaniyam, M. (2014) Thirukkural Moolamum Uraiyum, Commercial Publications, Sivakasi, India.

Thirunagnnasambamdam, S. (2018) Tholkappiyam Porulathigaram Moolamum Uraiyum, Kathir Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License